**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத்துறை**

**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம், கோவை**

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(05.11.2022முதல் 09.11.2022 )**

**அறிக்கைஎண் 088/2022** **தேதி.0411.2022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 24°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 23°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின்கடந்தவாரவானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 01.11.22 முதல் 03.11.22 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 23°செஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 66 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-14 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (01.11.2022 முதல் 03.11.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 09.11..2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01/11 | 02/11 | 03/11 | தேதி | நாள்-1 05/11 | நாள்-2 06/11 | நாள்-3 07/11 | நாள்-4 08/11 | நாள்-5 09/11 |
| 0.0 | 8.3 | 9.2 | மழை (மி.மீ) | 20 | 18 | 10 | 8 | 4 |
| 32 | 32 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 28 | 28 | 29 | 30 | 31 |
| 23 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 21 | 21 | 20 | 19 | 19 |
| 7 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 5 | 4 | 4 |
| 85 | 85 | 83 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 85 | 85 | 85 |
| 67 | 90 | 66 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 75 | 75 | 70 | 60 | 55 |
| 14 | 8 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 4 | 6 | 6 | 6 | 6 |
| 90 | 50 | 90 | காற்றுவீசும் திசை | 90 | 90 | 70 | 50 | 50 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (05.11.2022 முதல் 09.11.2022)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 28°செ முதல் 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19°செ முதல் 21°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4-6 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ளதொகுதிவாரியாகஉள்ள அடுத்தஐந்துநாட்களுக்கானமழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| 05-11-2022 | 38.0 | 21.0 | 23.0 | 26.0 | 22.0 | 21.0 | 33.0 | 33.0 | 20.0 | 22.0 | 20.0 | 24.0 |
| 06-11-2022 | 27.0 | 18.0 | 19.0 | 21.0 | 18.0 | 18.0 | 25.0 | 25.0 | 17.0 | 19.0 | 18.0 | 20.0 |
| 07-11-2022 | 23.0 | 12.0 | 13.0 | 14.0 | 11.0 | 10.0 | 19.0 | 19.0 | 10.0 | 13.0 | 11.0 | 12.0 |
| 08-11-2022 | 9.0 | 6.0 | 7.0 | 7.0 | 6.0 | 6.0 | 8.0 | 8.0 | 6.0 | 6.0 | 6.0 | 7.0 |
| 09-11-2022 | 0.0 | 2.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 2.0 | 2.0 | 2.0 | 1.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொதுஅறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு மிதமானது முதல் கன மழையுடன் காற்றின் வேகம் 4 - 6 கி.மீவரை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை குறைவாக நிலவ வாய்ப்புள்ளது. பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி செய்ய வேண்டும்.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் உரமிடல் மற்றும் மருந்து தெளித்தலை தவிர்க்கவும். |
| நெல் | விதைப்பு, வளர் மற்றும் பூக்கும் பருவம் | நிலவும் வானிலையால் நெல்லில் பேக்டீரியா இலைக்கருகல் நோய் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதை கண்காணித்து தேவைப்பட்டால் ஒரு எக்டருக்கு காப்பர் ஹைட்ராக்ஸைடு 1250 கிராம் (அ) ஸ்டெரெப்டோமைசின் சல்பேட் + டெட்ராசைக்கிளின் கலந்த கலவை 300 கிராமுடன் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 1250 கிராம் கலந்து தெளிக்கவும். |
| கொடிவகைகாய்கறிகள் | பூக்கும் பருவம் | தொடர் மழையினால் பூக்கும் பருவத்தில் உள்ள கொடிவகை காய்கறிகளில் அதிக தழை வளர்ச்சி காணப்படும். இதனால் பூ பிடித்தலை அதிகரிக்க எத்திரல் என்ற வளர்ச்சி ஊக்கியை பீர்க்கங்காய் தவிர மற்ற எல்லா கொடிவகைப் பயிர்களுக்கும் தெளிக்கவும். இதை மழையில்லா நாட்களில் இரண்டு முறை ஒருவார இடைவெளியில் தெளிக்கவும். |
| திராட்சை | | தொடர்ந்து காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதுடன் தூறல் மழையும் இருப்பதால் திராட்சையில் அடிச்சாம்பல் நோய் வரவாய்ப்புள்ளது. ஆகையால் விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தேவைப்பட்டால் மழையில்லா நாட்களில் ஒரு சதபோர்டோ கலவையை தெளித்து கட்டுப்படுத்தலும். |
| மாமரம் | | கடந்த வாரம் வரையிலானதொடர் மழையினால் மாமரத்தின் அதிக தழை வளர்ச்சியை கட்டுப்படுத்த ஒரு சதம் |

| | | |
|---|---|---|
| | | தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| மஞ்சள் | வளர் பருவம் | தொடர் மழையினால் மஞ்சளில் கிழங்கு அழுகலைத் தவிர்க்க போதிய வடிகால் வசதி செய்ய வேண்டும். |
| கால்நடைகள் | | மழை காலங்களில் கோமாரி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் அதற்கு தடுப்பூசி போடவும்.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடை கூடாரங்களில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளவும்.<br>உலர்தீவனங்களை மழையில் நனையாதவாறு பார்த்துக் கொள்ளவும் |

## குறுஞ்செய்தி

- மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி செய்ய வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**